

பக்கங்கள்: ஆறு
நல்லூர் இ.ப நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 05 சனிக்கிழமை (19 06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 203

யுத்தக் கைதிகளின் உறவினர்கள் பாஜ் மூலம் பருத்தித்துறை துறைமுகக் கரையை நோக்கி வந்து கொண்டிருப்பதை முதல் படத்திலும், பாஜில் அவர்கள் அமர்ந்திருப்பதை இரண்டாவது படத்திலும், பாஜில் இருந்து அவர்கள் இறங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம். அவர்களுடன் கூட வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதி வலது கோடியில் கடைசியாகக் காணப்படுகின்றார்.

# யுத்தக் கைதிகளைக் கண்டு கதறியழுதனர் உறவினர்கள்

## இரு தரப்பாரின் சந்திப்பும் உள்ளத்தை உருக்கும் காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 19

உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளைப் பார்ப்பதற்குத் தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள அவர்களது உறவினர்கள், தமது பிள்ளைகளை, சகோதரர்களை, கணவன்மாரைக் கண்டதும் ஓய்வில்லாது நீண்ட நேரம் கதறி அழுதனர்.

அவர்கள் இருதரப்பாரும் மூன்று வருடங்களின் பின்னர் வாஞ்சையுடன் சந்தித்தமை உள்ளத்தை உருக்குவதாக அமைந்தது.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள 39 யுத்தக் கைதிகளின் உறவினர்கள் 78 பேர் நேற்றுக் காலை சுமார் 8.30 மணியளவில் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

திருகோணமலையிலிருந்து அவர்கள் செஞ்சிலுவைக் கொடி பறந்த "நரோமா" கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

கப்பல் துறைமுகத்தை வந்து சேர்ந்ததும் அவர்கள் இழுவைப்படகு (பாஜ்) மூலம் கரைக்கு அழைத்து வரப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைக்கு உதவுமாறு அரசிடம் கேட்டுத் தோல்வி கண்டுவிட்டோம்

### பெளத்த மதகுரு சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 19

"எமது சகோதரர்களை விடுவிக்க உதவுமாறு அரசிடம் கோரிக்கை விட்டு, நேரில் கேட்டு தோல்விகளைக் கண்டோம். கருணை அடிப்படையில் எமது சகோதரர்களை விடுதலை செய்யுமாறு விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனிடம் நேரில் கேட்கவே இங்கு வந்துள்ளோம்.

இப்படிக் கூறினார் கெக்கிராவ மகா அலகம விகாரையைச் சேர்ந்த வண: ஏகம தம்முகுசல தேரர்.

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள ஜே.பி. ஜெயதிலகா என்னும் பொலீஸ்காரரின் சகோதரரான இவர் பருத்தித்துறையில் வைத்து மேற்கண்டவாறு உதயனுக்கு தெரிவித்தார்.

தேரர் அப்போது மேலும் கூறியதாவது:-

எனது சகோதரரைப் பிரிந்து எனது குடும்பம் மிகவும் கஷ்ட நிலையில் — வாழ முடியாத நிலையில் — உள்ளதால் அவரை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுதலை பெற்று எம்மிடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி, பொலீஸ்மா அதிபர், இராணுவ அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் பல தடவைகள் கடிதம் மூலமும், நேரடியாகவும் கோரியிருந்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று இளாலி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 19

இளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



பருத்தித்துறையில் யுத்தக் கைதிகளின் உறவினர்கள் மத்தியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. இ. இளம்பரிதி உரையாற்றும் போது அதனை ஒருவர் மொழிபெயர்த்த சமயம் எடுக்கப்பட்டது.

## உடுகம்பொல நேற்று நாடு திரும்பினார்!

கொழும்பு, ஜூன் 19

கடந்த சிலகாலமாக தலைமறைவாக இருந்த முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல நேற்றுப் பிற்பகல் நாடு திரும்பினார்.

அரசுக்கு எதிரான குற்றங்களைப் புரிந்ததாக இவர் மீது வழக்குகள் நீதிமன்றத்தில் உள்ளன.

"விசாரணைகளை எதிர்நோக்க நான் தயாராக உள்ளேன். விசாரணைகள் நேர்மையாக நடைபெறும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" — இவ்வாறு அவர் விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

ஒரு கட்டத்தில் சில செய்தியாளர்கள் "இன்னும் பல புதிய திடுக்கிடும் தகவல்களை எல்லாம் நீங்கள் வெளியிட இருக்கிறீர்களா?" — என்று கேட்டதற்கு —

"இனிமேல் யாருக்கு எதிராக நான் வெளியிட இருக்கிறது?" — என்று புன்சிரிப்போடு திருப்பிக் கேட்டார் உடுகம்பொல.

திரு. உடுகம்பொல பொலீஸாரினால் கைது செய்யப்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காக சென்னையில் இதுவரை காலமும் தங்கியிருந்தார்.

ஜனாதிபதி பிரேமதாச தமது ஆட்சிக் காலத்தில் கொலைப் படை ஒன்றை நடத்தியதாகவும் —

தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாகவும் திரு. உடுகம்பொல குற்றஞ்சாட்டி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகருக்கு புலிகளால் ஆபத்து!

### பாரிஸில் ரணில் பேட்டி

பாரிஸ், ஜூன் 19

"விடுதலைப் புலிகளால் கொழும்பு நகருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது"

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாரிஸில் வைத்து பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் சொன்னதாவது:-

"கொழும்பில் தமிழர்கள் கைது செய்யப்படுவது பற்றிய புகார்களைத் தொடர்ந்து தமிழர் கட்சிகளும் பாதுகாப்புத்துறையும் என்னுடன் பேச்சுக்கள் நடத்தின. அதனைத் தொடர்ந்து கைது செய்வது பற்றிய நெறிமுறைகள் வகுக்கப்பட்டன.

"விடுதலைப் புலிகளால் கொழும்பு நகருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உள்ளது. எனினும் அப்பாவித் தமிழர்கள் துன்புறுத்தப்படுவது அனுமதிக்கப்படவே கூடாது,

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## 'குமண'வில் தனியாருக்கு பெருமளவு பொருள்கள்

### தபால் பொதிகள் வரவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 19

தனியார்துறையினருக்கான பெருமளவு பொருள்களுடன் 'குமண' கப்பல் நேற்று முற்பகல் பருத்தித்துறையை வந்தடைந்தது.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் பொருள்களை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து அவற்றை கப்பலில் இருந்து இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பமாகின.

தனியார் வைத்தியசாலைகளுக்கும், யாழ். ஆஸ்பத்திரிக்கும் மருந்துப் பொருள்களும் ஒட்சிசன் சிலிண்டர்களும் இம்முறை கப்பலில் வந்துள்ளன.

கமநல சேவைப் பணிப்பாளருக்கு 325 மெற்றிக் தொன் அமோனியம் சல்பேற்றும்—

மற்றும் யாழ். கல்வி அலுவலகத்துக்கு பாடசாலை மேசை, கதிரை என்பனவும்

( 5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்தி நல்லடக்க ஆராதனை

அமரர் கதிரவேற்பிள்ளை ஜெயரட்ணம்

அராலி வடக்கைச் சேர்ந்த அமரர் கதிரவேற்பிள்ளை ஜெயரட்ணம் அவர்களின் அஸ்தி நல்லடக்க ஆராதனை 20-6-93 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு தென்னிந்திய அராலித் திருச்சபை தேவாலயத்தில் நடைபெறும். ஆராதனையின் பின்னர் அஸ்தி அராலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
து. சத்தியநாதன்

''புஷ்ப வாசா'',
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

(26142)

## 14ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### இராசமணி மகேசன்

தோற்றம்: 02—02—1909
மறைவு: 19—06—1979

என்றும் உங்கள் நினைவால் வாடும்;

தங்கள் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள், சகோதர,
சகோதரிகள், உறவினர், நண்பர்.

''லிங்கவாசா'',
நவாலி.

(6273)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 24 — 01 — 1972
உதிர்வு: 19 — 06 — 1989



அமரர்

### சின்னப்பு தர்மபாலா (கோலா)

(சாயி வீடியோ படப்பிடிப்பாளர்)

எத்தனை கற்பனைகள் உள்ளத்தில் உதித்தனவோ அத்தனையும் நிஜமாகும் வேளையில் உம்மை நாம் இழந்தோம் இவருடன் நண்பனுக்கு இலக்கணமாய் நின்று எமக்கு அரிய பல உதவிகளைப் புரிந்து ஒரே வேளையில் மரணத்தைத் தழுவிக் கொண்ட நிஹால் மற்றும் அன்னாரின் தந்தை ஆசிரியர் விநாயகமூர்த்தி ஆகியோருக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம.

''சாயி வீடியோ''

அச்சுவேலி.

[illegible]

## பாடசாலைகளில்

பாலர் கல்விக் கழகம் நிர்வகிக்கும் யாழ். அரசடி வீதி ஞானக்குழந்தை இல்லத்தின் 2 ஆவது வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஆசிரியை செல்வி நிர்மலாதேவி சதாசிவம் தலைமையில் நடைபெறும். (ஒ)

o o o

நவாலி சென். பீற்றேர்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அதிபர் திரு சிறில் சுகந்தரன் தலைமையில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நவாலி சென். பீற்றேர்ஸ் தேவாலய முன்றலில் நடைபெறும்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (உ-152)

o o o

சுதுமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு பாடசாலை அதிபர் திரு க. செல்லத்துரை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. செ. சிவகுமார் பங்குபற்றுவார்.

(உ-152)

## நாளை

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் அபிவிருத்தி தொடர்பாக பெற்றோர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி லோ. குமாரசாமி தலைமையில் நடைபெறும். [ஓ-110]

o o o

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கு நாளை பிற்பகல் மூன்று மணிக்கு ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய பணிமனையில் நடைபெறும். ''திருமணப் பொருத்தங்களும் சர்ச்சைகளும் தீர்வும்'' என்ற தலைப்பில் சபையோரின் வாதம் இடம் பெறும். [உ]

o o o

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன பற்றிய விளக்க விரிவுரைக் கூட்டம் நாளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அலுவலகத்தில் நடைபெறும். கொழும்பில் இருந்து வரும் குழு இது தொடர்பான விரிவுரையை காலை 10 மணிக்கு அங்கத்தினர்களுக்கும், பிற்பகல் 3 மணிக்கு தொண்டர்களுக்கும் நடத்தும்.

(ஓ-3)

## ஆலயங்களில்

உரும்பராய் ஓடையம்பதி கற்பகப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் இன்று சனி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். ஜூலை மாதம் 1ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (க)

o o o

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் மகோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த் திருவிழா ஜூலை மாதம் 2ஆம் திகதியும் தீர்த்தத்திருவிழா மறுநாள் 3ஆம் திகதியும் நடைபெறும். (க)

## பதவி அமர்வு ஆராதனை

யாழ்ப்பாணம், ஜூன் 19

திரு சிவசம்பு தனபாலனை சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபராகப் பதவி அமர்த்துவது தொடர்பான ஆராதனை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு சுண்டுக்குளி சென்ஜோன் ஆலயத்தில் நடைபெறும். (இ)

## இன்று


யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான ''சமூக சுகநலக் கல்வி'' பற்றிய சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு இன்றும், நாளையும் காலை 9 மணி முதல் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

(ஓ-162)

ஓம் விராட் விஸ்வ பிரமனே நம

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 13 — 07 — 1910
உதிர்வு: 20 — 05 — 1993



விஸ்வகுல திலகர்
அமரர்

### வைத்திலிங்கம் சிவனடியார்

அந்தியேட்டி 19—06—1993

எங்கள் அன்புத் தகப்பனாரின் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல எங்கள் குலதேவி பத்திரகாளி தாயாரையும், திருநெல்வேலி சிவபெருமான், அராலி ஆவரம்பிட்டி அம்பாள் இவர்களை வேண்டி நிற்கும்.

அன்னாரின்
குடும்பத்தினர்

''குமாரோதயம்''
நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு.

(26158)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்: 27 — 02 — 1972
அன்னியன் பிடியில்: 19 — 06 — 1989



### செல்வன் சண்முகம் உதயவர்மன் (பேபி)

[மு/புதுக்குடியிருப்பு உயர்தர கணித விஞ்ஞானப் பிரிவு மாணவன்]

''உன் நினைவலைகள் வந்திடும் வேளையில்
எம் கருவிழிகளில் கண்ணீர் கசிந்திடும்
எம் இதயங்களில் உன்ராகம் பாடிட
எம் உணர்வுகள் தானின்று மறந்து நிற்கின்றன''

அப்பா, அம்மா, அண்ணாமார்.

''உமா வாசம்'',
புதுக்குடியிருப்பு.

73, பலாலி வீதி,
கந்தர்மடம்.

[26154]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 21 — 06 — 1922
விண்ணில்: 19 — 06 — 1991



### செபஸ்தியாம்பிள்ளை திரேசம்மா

என்றும் எங்கள் இதயங்களில் கோயில்-
கொண்டிருக்கும் அம்மம்மா?
எண்மூன்று மாதங்களா? எண்ணிப் பார்க்க
முடியவில்லை?
நீங்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை!
எடுத்தியம்பிய அறிவுரைகள்!
வாயிலுதித்த வார்த்தைகள்!
கனிவான கண்டிப்புகள்!
கற்பித்த இறைவனின் வார்த்தைகள்!
அன்பான உங்கள் அரவணைப்பு!
ஓ......அந்தப் பசுமையான நாட்களை எண்ணி-
வேகுகின்றோம்!
உங்கள் நினைவுகள் நீங்காத நினைவுகளாக
என்றும் எங்கள் நெஞ்சமதில் தொடர்ந்து வரும்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்.

116, ஏவி றோட்,
அரியாலை.

(26128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு
## கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் பதவி

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் 11 ஆம் தரம் ''ஆ'' பிரிவு கூட்டுவுறவுப் பரிசோதகர் பதவிகளுக்கு பின்வரும் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளான ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பரீட்சை ஆணையாளரினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி திறமை அடிப்படையில் தகைமையுள்ள தேர்வு நாடிகள் மாவட்ட இன விகிதாசார முறையில் மேலே குறித்த பதவிகளில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுவர்.

01. இப்பதவிக்குரிய வருடாந்த திரட்டிய சம்பள அளவுத் திட்டம்:

ரூபா 24,120 — 14x660 — 6x780 — 38,040

1:2 தொழிலின் நிபந்தனைகள்
வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒழுங்கின்படி தொழில் நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரியதுமாகும்.

02. தகைமைகள்:

2:1 விண்ணப்பதாரர் நல்லொழுக்கமுடையவராகவும், சிறந்த உடல் நலம் கொண்ட இலங்கைப் பிரசையாகவுமிருத்தல் வேண்டும்.

2:2 விண்ணப்பதாரர் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் தொழிற்பரப்பெல்லைக்குள் 1993 - 07 - 02 ஆம் திகதியில் உடன் முன் சென்ற 6 வருட காலத்துள் தாம் நியமனம் பெற உத்தேசித்துள்ள மாவட்டத்தில் தொடர்ச்சியாக 3 வருடங்கள் நிரந்தரமாக வசித்திருத்தல் வேண்டும்.

2:3 வயதெல்லை:
1993 - 07 - 02 ஆம் திகதியில் வயது 18க்குக் குறையாதவராகவும், 40க்கு மேற்படாதவராகவுமிருத்தல் வேண்டும். (தற்போது அரசசேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விடயத்தில் மேல் வயதெல்லை ஏற்புடைத்தாகாது)

2:4 கல்வித் தகைமைகள்:

2:4:1 சிங்களம்/தமிழ் அத்துடன் கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம் ஆகிய இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் க.பொ.த.ப. (சா.த) பரீட்சையில்

அல்லது

தே. பொ. த. ப. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்

அத்துடன்

க. பொ. த. ப. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 4 பாடங்களில் சித்தி

2:4:2 மேலே 2:4:1 இல் உள்ள க. பொ. த. (சா/த), தே. பொ. த. ப. (சா/த) தகைமையுடன் க. பொ. த. ப. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியுடன் பொல்கொல்லை கூட்டுறவுக் கல்லூரியினால் நடத்தப்படும் கூட்டுறவு உயர்தர அல்லது முகாமையியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

03. எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி குறித்த மாவட்டத்தில் வதியும் விண்ணப்பதாரர்களிடையே போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று குறித்த தகைமையுள்ளவர்களை மட்டுமே இப் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவர். தெரிவு செய்யப்படுவதற்கான தகைமையினைப் பெற்றுக் கொள்வதற்கு பரீட்சை நடத்தப்படும் பாடங்கள் இரண்டிலும் குறைந்தது 40% புள்ளிகளாவது பெறுதல் வேண்டும்

3:1 அவ்வாறு குறைந்தது 40% புள்ளிகள் பெற்று பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட தேர்வு நாடிக்கு பொது நிருவாக சுற்றுநிருப இல. 17/92க்கு அமைவாக மேலதிக புள்ளிகள் வழங்கப்பட்டு விண்ணப்பதாரரின் முன்னுரிமை தீர்மானிக்கப்படலாம்.

04, பரீட்சைக்கான பாட விதப்புரை:

1. நுண்ணறிவும், தர்க்கமும்.
விண்ணப்பதாரரின் எண்கணிப்புத் திறனையும், பிரச்சினைகளுக்கான தீர்வையும், தர்க்க ரீதியான இயலுமையையும் பொது விவேகத்தினையும் கணிக்கும் வகையிலான குறுகிய, வினாக்களைக் கொண்ட 1 மணித்தியால வினாப்பத்திரம் ஒன்று.

(புள்ளிகள் 100)

2. பொது அறிவு:
கீழ்வரும் விடயங்களின் அடிப்படையில் அமைந்த வினாக்களைக் கொண்ட 1½ மணித்தியால வினாப்பத்திரம் ஒன்று.

(புள்ளிகள் 100)

1. இலங்கை கூட்டுறவு இயக்கம்
2. சர்வதேச கூட்டுறவு இயக்கம்
3. கூட்டுறவும் மக்கள் அபிவிருத்தியும்,
4. கூட்டுறவுச் சங்க முகாமைத்துவம்,
5. கூட்டுறவு இயக்கத்தின் புதிய திருப்பம்,
6. தேசிய சர்வதேச நாளாந்த நிகழ்ச்சிகள்,
7. சமூக பொருளாதாரச் செய்திகள்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் சிங்களம், தமிழ். ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பரீட்சைகள் நடைபெறும்.

05. பரீட்சை நிலையங்கள்:

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்திவு, கிளிநொச்சி ஆகிய பிரதான நகரங்களின் அண்மையில் உள்ள மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

06. பரீட்சைக் கட்டணம்:

ரூபா 100/- ஆகும். விண்ணப்பதாரர் வதியும் பகுதிப் பிரதேச பிரதம செயலாளர் அலுவலகங்களில் இப் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி, அதற்கான பற்றுச் சீட்டை விண்ணப்பப் பத்திரத்தில் ஒட்டுதல் வேண்டும். பிரதேச பிரதம செயலாளர் அலுவலகங்கள் அமைக்கப்படாத பகுதிகளில் அரசாங்க அதிபர் அலுவலகங்களில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்திப் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

07. விண்ணப்பப்பத்திரம் அனுப்ப வேண்டிய முறை:

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை முறையாகப் பூரணப்படுத்தி கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் உள்ள சான்றிதழ்களையும் பெற்று, பதிவுத் தபாலில் 'செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு, திருகோணமலை' எனும் விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரும், மாவட்டமும் குறிப்பிடப்படல் வேண்டும். (தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்).

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி:

**1993 — 07 — 02** ஆம் திகதியாகும். அத்தினத்தில் அல்லது அதற்கு முன்னர் எனக்கு கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத / தாமதமாகக் கிடைக்கும் அடிப்படைத் தகைமைகள் இல்லாத விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

எஸ். விநாயகலிங்கம்,
செயலாளர்,
வடக்கு-கிழக்கு மாகாண
பொதுச்சேவைகள் ஆணைக்குழு,
திருகோணமலை.

11-06-1993.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

(கடதாசியின் அளவு 8½ 12—01 தொடக்கம் 09 வரை விடயங்கள் 1ஆவது பக்கத்திலும் 10 தொடக்கம் 12 வரை விடயங்கள் 2ஆவது பக்கத்திலும் குறிப்பிடல் வேண்டும்.)

### வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை கூட்டுறவுச் சங்க பரிசோதகர் 11 'ஆ' தரத்தில் ஆட்களைச் சேர்ப்பதற்கான

# போட்டிப் பரீட்சை - 1993

01. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்):
விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (ஆங்கிலத்தில்):
முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்):

0𝟐. தபால் விலாசம் (ஆங்கிலத்தில்):
தபால் விலாசம் (சிங்களத்தில்/தமிழில்):

03. ஆண்/பெண் என்பது பற்றி:

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி:

05. நீர் இலங்கைப் பிரஜையா?'
வம்சாவளியினாலா அல்லது பதிவு செய்யப்பட்டதனாலேயா என்பதனைக் குறிப்பிடுக.

06. இனம்: சிங்களப்/இலங்கைத் தமிழர்/இந்தியத்தமிழர்/முஸ்லிம்/வேறு
(பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்)

07. பிறந்த திகதி:............... வருடம்:...............
மாதம்: ............ திகதி; ............

08. 1993-04-23ஆம் திகதிக்கு வயது:
வருடம்: ............ மாதம்; ...... திகதி: .........

1. விண்ணப்பிக்கும் மாவட்டம்:
(திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை, யாழ்ப்பானம், முல்லைத்திவு, மன்னார், கிளிநொச்சி)
(பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்)

2. நீர் நிரந்தரமாக வதியும் பிரதேச செயலாளர் பகுதி:

3. கிராம உத்தியோகத்தர் பகுதி:

4. வதியும் கால எல்லை: ..................
தொடக்கம்: ............ வரை: .........

09. கல்வித் தகைமை:

9:1 க.பொ.த.சாதாரணதர பரீட்சை — தே. பொ. த. சா. பரீட்சை;
தோற்றிய ஆண்டு; — தோற்றிய ஆண்டு:
பரீட்சை இலக்கம்: — பரீட்சை இலக்கம்:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |
| 6. | | 6. | |
| 7. | | 7. | |
| 8. | | 8. | |

9:2 க. பொ. த. உயர்தரப் பரீட்சை:
தோற்றிய ஆண்டு: பரீட்சை இலக்கம்:
பாடங்கள்;
1.
2.
3.
4.

9:3 வேறு தகைமைகள்:
பொல்கொல்லை கூட்டுறவுப் பாடசாலையினால் நடத்தப்படும் கூட்டுறவு உயர் தகைமை சான்றிதழ் / முகாமைத்துவ டிப்ளோமா சான்றிதழ் பெற்றுள்ளீரா? பெற்றிருப்பின் வருடமும் சான்றிதழ் இலக்கமும்.

10. பயங்கரவாத செயல் காரணமாக நீங்கள் அல்லது உங்களது குடும்பத்தில் ஒருவர் பாதிக்கப்பட்டிருந்தால் அது கீழ்க் குறிப்பிடப்படும் ' பாதிப்புகளில் எந்த வகையைச் சேர்ந்தது என்பதைக் குறிப்பிடுக:

1. உங்களது தந்தை அல்லது தாய் கொலை செய்யப்பட்டாரா?
2. உங்களது கணவர் அல்லது மனைவி கொலை செய்யப்பட்டாரா?
3. உங்களது குடும்பத்திற்கு உதவி செய்த சகோதரர் அல்லது சகோதரி கொலை செய்யப்பட்டாரா?
4. உங்களுக்கு, உங்கள் மனைவிக்கு/கணவருக்கு அல்லது உங்கள் தந்தைக்கு அல்லது தாய்க்கு சொந்தமான சொத்துக்கள் பூரணமாக நாசமாக்கப்பட்டனவா? அப்படியாயின் அது பற்றிய விவரங்கள்.
5. மேலே, 1, 2. 3இல் குறிப்பிட்ட யாரேனும் ஒருவர் ஊனமுற்ற நிலைக்கு ஆளாகி உள்ளாரா? - அப்படியாயின் விவரங்கள்.

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள பயங்கரவாதப் பாதிப்புக்களைச் சேராத சம்பவங்கள் பற்றிய விவரங்கள் தேவையற்றனவாகும். அப்படியான சம்பவங்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

11. விண்ணப்பதாரியின் சான்றிதழ்:
இவ் விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் நானறிந்த வரையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதிப்படுத்துகின்றேன். என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என நிரூபிக்கப்பட்டால் நான் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு முன்பு இப் பதவிக்கு பொருத்தமற்றவராக ஆக்கப்படுவேன் என்பதனையும் நியமனம் பெற்றுக் கொண்ட பின்பு அங்ஙனம் நிரூபிக்கப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவேன்என்பதனையும் நான் அறிவேன். என்னால் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட 100 ரூபாவுக்கான........... இலக்கமும் ........... திகதியும் கொண்ட பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பதாரியின் கையொப்பமும் திகதியும்

..................................................................

[5ஆம் பக்கம் பார்க்க]

(இ-5281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு மாதங்கள் நிரம்பிய பூச்சியகற்றிய அழகிய ஆண், பெண் பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 222, ''லக்சுமி வாசா'', தெல்லிப்பழை வீதி, (வட்டு. இந்துக் கல்லூரிக்கு அருகில்), சித்தன்கேணி. (26118)

மூன்று மாத கறுப்பு நிற ஆண் அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: N. விஜியதரன் (விஜி) இல: 125, ஐயனார் கோவில் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (26146)

## காணி விற்பனை

விதானையார் வீதி, சுண்டிக்குளியில் 2 பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மு. பத்மநாதன் 22/3A, விதானையார் வீதி, சுண்டிக்குளி யாழ்ப்பாணம். (6261)

## தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டியில் சோடா, ஜாம் என்பன கமிசன் அடிப்படையில் விற்பனை செய்யக் கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: உணவு பதனிடல் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், முதன்மைச் செயலகம், தாவடி. (இ/5282)

## மணமகன் தேவை

மேட லக்கினம், 3இல் செவ்வாய், 9இல் சூரியன், புதன், வியாழன், சனி. 10 இல சந்திரன், சுக்கிரன் அவிட்டம் 2 ஆம் பாதம், வயது 33, பயிலுனர் ஆசிரியைக்கு மணமகன் தேவை. தொடர்பு: எஸ். ஆறுமுகம் கற்குளி றோட், சாவகச்சேரி. (26138)

தனு லக்கினம், 7 இல் வியாழன், 8இல் சுக்கிரன், கேது, 9இல் சூரியன் செவ்வாய், அனுஷம் 1ஆம் பாதம், வயது 40, A/L சித்தி. பொருத்தமான மணமகன் தேவை. தொடர்பு: எஸ். ஆறுமுகம், கற்குளி றோட், சாவகச்சேரி. (26139)

சிங்க லக்கினம், 7இல் சந்திரன், செவ்வாய், சனி. 10இல் வியாழன், ராகு, பூரட்டாதி 2ஆம் பாதம், 27 வயது, பயிலுனர் ஆசிரியைக்கு B Sc. ஆசிரியர் தேவை. தொடர்பு: எஸ். ஆறுமுகம், கற்குளி றோட், சாவகச்சேரி. (26137)

## தவறிவிட்டது

கறுத்தப் பையுடன் கூடிய இரண்டு பைபிள்கள், அராலிப் பாலத்துக்கும் நவாலி அரசடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள். AOG, ஹப்பி ஹவுஸ், அராலி கிழக்கு, அல்லது ஜெப நிலையம், AOG மானிப்பாய் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (26141)

## விண்ணப்பப்படிவம்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழு கூட்டுறவுச் சங்கங்களின் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப் படிவங்களும், N.C.E. விண்ணப்பப் படிவங்களும் அருண் அச்சகம், இல. 15, இரண்டாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்; சுன்னாகம் உதயன் சேவை நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

## குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள், கோடியல்கள், சுத்தமானவை. சுவையானவை பருகிக் களிப்படைவீர். தயாரிப்பு: விநியோகம்: Siva Industries, 85/3, Colombogam Road, Chundikuli. (சி-5307)

## சோதிடம்

ஜாதக பலன், திருமணப் பொருத்தம், எண்சோதிடம் மற்றும் வெளியூரில் பிறந்தவர்களின் ஜாதகக் குறிப்புகள் எழுதிக் கொள்ளலாம். சிவா, 712, நாவலர் வீதி, அரியாலை. (6259)

## புலமைப் பரிசில் பரீட்சை

சிறந்த பெறுபேற்றை வருடா வருடம் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் ஆண்டு -5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் 20 - 06 - 1993 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26122)

## புலமைப் பரிசில் வகுப்பு

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் நடத்தப்படும் வினாத்தாள் வகுப்பு 19-06-1993 சனி காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படும். 20-06-1993 ஞாயிறு மாலை 2 மணிக்கு மாதிரிப் பரீட்சை நடைபெறும். நாவலர் கல்விக் கழகம், நாவலர் வீதி, ஆனைப்பந்தி. (26136)

## மாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 01-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

## சாறிப் பெட்டிகள்

தங்களுக்குத் தேவையான கூறைச்சேலைப் பெட்டிகள், சாறிப் பெட்டிகள், பின் புத்தகங்கள், தாலிக்கொடிப் பெட்டிகள் ஆகியவற்றை அழகாக செய்து பெற்றுக் கொள்ள நாடுங்கள்: மஹாலக்ஷ்மி அச்சகம், சத்திரச் சந்தி, யாழ்ப்பாணம். (6268)

---

உ
அம்பாள் துணை

வண். வடமேற்கு ஆனைக்கோட்டை

# அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள்

தேவஸ்தானம்

## வருடாந்த அலங்கார உற்சவம்

ஆரம்பம்:— 19–06–1993 சனிக்கிழமை
நிறைவு:— 04—07—1993 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4-00 மணி அபிஷேகம் - 5-00 மணி
வசந்த மண்டபப்பூசை தொடர்ந்து வீதி எழுந்தருளல்.
இரவு 7-00 மணி முதல் 8-00 மணி வரை

★ "தேவி பாகவதம்" ★

என்னும் பொருள் பற்றி தெய்வீக சொற்பொழிவு
நிகழ்த்துபவர்:- திரு. த. சிவகுமாரன்
(ஆசிரியர், யாழ்- இந்துக் கல்லூரி - அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம்)

— திருப்பணி சபை

(26140)

---

# நாடக விழா

யாழ் கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக வளர்ச்சிக்காக 19-06-1993 [இன்று] நடைபெறவிருந்த


நகைச்சுவைக் கதம்பம், மயானத்தில் மன்னன்

ஆகிய நிகழ்ச்சிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 10-07-1993க்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகிறோம்.

(26149) - நிர்வாகிகள்.

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## செல்வன் தம்பிராசா சக்திவேல்

பிறப்பு: 08—02—1971 இறப்பு: 01—07—1989

திதி: 19—06—1993

ஆசைக்கொரு மகனாய் ஆவலுடன் வளர்த்தெடுத்து
பாசக் குழை வதனால் பாதுகாப்பது நாடி
தேசம் விட்டொருதேசம் அனுப்பினோம், ஆனால்
தோசம் என்ன சூழ்ந்ததுவோ சூழ்ந்த ஒரு தீயினிலே
வீகம் செந்தழலில் வெந்து சாம்பாராகி இன்று
நான்காண்டு சென்றாலும் நாம்மறவோம் நம்மகனே
நம்முயிர்தான் உள்ளவரை நாம்மறவோம் எம்தம்பி
நாம் வாழுங் காலம்வரை நாம்மறவோம் எம்மண்ணா
நான்காண்டு நிறைந்தாலும் நம் கண்ணீர்-
வற்றவில்லை.
நாம்சொரியும் கண்ணீராம் பூக்களினால் அஞ்சலியே!

உமது பிரிவால் ஏங்கும்;
அப்பா, அம்மா, சகோதரிகள்,
குடும்பத்தினர்.

மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய். (26180)

---

# நன் மரண ஞாபகம்

## வருடம் 7 வருடம் 10



திருமதி
**அந்தோனியாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**
தோற்றம்: 15—10—1918
மறைவு: 19—06—1986

அமரர்
**நீ. அந்தோனிப்பிள்ளை**
தோற்றம்: 04—04—1908
மறைவு: 07—04—1983

இறைபதமடைந்த எம் அருமைப் பெற்றோரை அன்புடன் நினைவு கூருகிறோம். வான் வீட்டில், இறை இன்பத்தில், இறைபுகழ் பாட இவர்களுக்காக இறைஞ்சுவோம்.

அன்புடன் நினைவு கூரும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தற்காலிக வதிவிடம்:
265, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நாகசெட்டி கமம்,
நானாட்டான், (6270)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 01 — 10 — 1942



மறைவு: 20 — 05 — 1993

திருமதி
## இலங்கேஸ்வரி குலசேகரம்பிள்ளை

தந்தையை இழந்தபின் எமக்குநீர்
தாயொடு தந்தையாயிருந்தீர்!
எந்தாயே அம்மா! இன்றெமை
தனிமையில் விட்டேன் சென்றீர்!
விந்தையாம் உலகிது உண்மை
வேதனையோடு வாழுகின்றோம்!
எந்தாயே இறைபதமடைய
இறைஞ்சுவோம் இறைவனை நாமே!

கு. அருளினி, கு. தர்மினி,
கு. அங்கஜன்.

2/1, அருளம்பலம் ஒழுங்கை,
அரியாலை. (26108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தமிழர்களின் உண்ணாவிரதங்கள்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாகத் தடுப்புக் காவலில் உள்ள 190 தமிழர்கள், தங்களை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாக வர்ணித்து வெளி உலகத்தை ஏமாற்றித் தமிழர்களைக் கொன்றொழிப்பதும், சித்திரவதைசெய்து கொடுமைப் படுத்துவதுமே சிங்கள அரசாங்கங்களின் நோக்கமாகும். அந்த நோக்கத்தை நிறைவேற்றும் முக்கிய கருவிகளில் ஒன்று பயங்கரவாதத் தடைச் சட்டம்,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்—

சாதாரண வாழ்க்கை வழியில் நடந்த பல தமிழ் இளைஞர்கள் காரணம் இன்றிக் கைது செய்யப்பட்டார்கள். பாதுகாப்புப் படையினரால் நீண்ட காலம் விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டார்கள். சகலவித சர்வதேச மனித உரிமைகளை மீறும் விதத்திலும், மனித நேயத்தைத் துறந்த நிலையிலும் தமிழ் இளைஞர்களும் பொது மக்களும் மிகக் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்போர்வையின் கீழ் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அழிக்கப்பட்டார்கள்.

அவற்றின் விளைவாக லட்சக்கணக்கான தமிழ் இளைஞர்களும், தமிழ்ப் பொதுமக்களும் விடுதலைக்கு வழி, அரசையும் ஆயுதப்படைகளையும் ஆயுதம் ஏந்தி எதிர்கொள்வது தான் என்ற முடிவுக்கு உந்தித் தள்ளப்பட்டனர். வெறுங்கையுடன் ஆயுதப் படையினருக்கு இரையாகுவதைவிட ஆயுதம் ஏந்தி மண்மீட்புக்காக உயிர் ஈவது மேலானது என்ற உணர்வை எழுபதுகளின் பிற்பகுதியில் இருந்தே பயங்கரவாதத் தடைச்சட்டம் வளர்க்கத் தொடங்கியது. அந்த உணர்வின் எழுச்சியே, வளர்ச்சியே அரச இராணுவ ஒடுக்குமுறைக்கு எதிரான தீப்பிழம்பாக இப்போது சுவாலை விட்டெரிகிறது.

எனினும் தமிழர்களைக் காரணமின்றிக் கைது செய்து சித்திரவதை செய்து அவர்களது வாழ்க்கையைச் சீரழிக்கும் வேலையை படையினர் இன்னும் நிறுத்தவில்லை. தொடர்கிறார்கள்.

இந்த லட்சணத்தில் தான் ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் பேணப்படுவதாகவும், தமிழர் நலன் காக்கப்படுவதாகவும். வெளிநாடுகள் நம்ப வைக்கப்பட்டுள்ளன. அதன் பெயரில் உலகத்திடமிருந்து பெருந்தொகை நிதி உதவியும் பெறப்படுகிறது. இம் முறையும் எவ்வித சிரமமும் இன்றி ஸ்ரீலங்கா அரசுக்கு பாரிஸ் மாநாட்டில் 80 கோடி டொலர் கிடைக்கவிருந்தது.

இவ்வாறான நிதி உதவிகளில் பெரும் பகுதி தமிழர்களை அடக்கி ஒடுக்குவதற்கும், இனத் துடைப்புச் (Ethinic Cleansing) செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதனை உலகம் கண்டுகொள்ள மறுக்கிறது.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் பாரிஸ் மாநாடு நடக்கும் போதும், மனித உரிமைகள் உலக மாநாடு ஆஸ்திரியாவில் நடக்கும போதும் தடுப்புக் காவல் தமிழ்க் கைதிகளின் உண்ணாவிரதமும், கொழும்புக்கு இடம் பெயர்ந்த மட்டக்களப்புத் தமிழ அகதிகளின் உண்ணாவிரதமும் இடம் பெறுகின்றன. ஆனால் இவை வெளி உலகத்தின் கண்களையும் காதுகளையும் மனங்களையும் திறக்குமா? மேலை நாட்டு மக்கள் தொடர்பு சாதனங்கள் இவற்றுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து பிரபல்யப்படுத்துமா?

எப்படியோ காலம் பிந்தியாவது தெற்கில் தமிழர் நடத்தும் உண்ணாவிரதங்களுக்குப் பயன் கிடைத்தேயாகும்.

# விடுதலைப் புலிகளுக்கு புண்ணியம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்

## யுத்தக் கைதியின் தாய் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 19

அம்மா, அப்பா போன்று எனது பிள்ளையை வைத்துப் பராமரித்து வரும் விடுதலைப் புலிகளுக்கு புண்ணியம் ஏற்படவேண்டும் என்று நான் போகும் பௌத்த ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் பிரார்த்திக்கிறேன்.

—இப்படிக் கூறினார் பொத்துவிலைச் சேர்ந்த திருமதி சந்தியவதி சோமபாலா [40 வயது].

யுத்தக் கைதியாக விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள நந்தன சமன்சிறி [20 வயது] என்ற பொலீஸ் கான்ஸ்டபிளின் தாயாரான அவர் தனது கணவருடன் யாழ்ப்பாணம் வந்துள்ளார் பருத்தித்துறையில் வைத்து அவர் உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

எனக்கு ஆறு பிள்ளைகள். மூத்த மகள் விவாகம் செய்துவிட்டார். மூத்த மகன் நந்தன சமன்சிறி விடுதலைப் புலிகளின் காவலில் உள்ளார். ஏனைய பிள்ளைகள் சிறியவர்கள். அவர்கள் பாடசாலைக்குச் செல்கிறார்கள்.

எனது கணவனுக்கு போதிய வருமானம் இல்லை அதனாவேயே நந்தன சமன்சிறியை 16 வயதில் பொலீஸில் சேர அனுப்பினோம். வேலைக்குச் சேர்ந்த 5 மாதங்களில் அவர் விடுதலைப்புலிகளினால் பிடிக்கப்பட்டுவிட்டார்.

அவருடைய சம்பளம் இரண்டாயிரத்து 400 ரூபா மட்டும் எமக்கு தருகிறார்கள். மாதா மாதம் பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் சம்பளம் எடுக்க வேண்டும்.

எனது தகப்பனார் தமிழ் மக்களுடன் நெருக்கமாகவும அன்பாகவும் பழகியவர்.

''விடுதலைப் புலிகள் நல்லவர்கள். எமது பிள்ளைகளை அவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்கள். அவன் உயிருடன் எம்மிடம் திரும்பி வருவான்.'' — என்று எனது தந்தையார் எனக்கு ஆறுதல் கூறுவார்.

நான் செல்லும் தேவாலயங்களிலும், பௌத்த ஆலயங்களிலும், எனது மகனை பாதுகாத்து வைத்திருக்கும் விடுதலைப் புலிகளுக்கு புண்ணியம் கிடைக்க பிரார்த்திப்பேன்—

எமது மகனை எம்மிடம் விடுதலைப் புலிகள் ஒப்படைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு — அழுதவாறு கூறினார் சந்தியவதி.

### கணவர் பேட்டி

சந்தியவதியின் கணவர் சோமபாலா பருத்தித்துறையில் வைத்து உதயனுக்குத் தெரிவித்தாவது:-

எமது பிள்ளைகளின் விடுதலைக்கு உதவுபவர்களும் மற்றும் சில பெற்றோரும் கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதியின் செயலாளரைச் சந்தித்து எமது பிள்ளைகளை விடுதலை செய்து எம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டனர்.

இது விடயமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலமாக விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு பேசிவருவதாகவும்—

கைதிகள் பரிமாற்றம்,சம்பந்தமாக அதாவது தமது பாதுகாப்பில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்து புலிகளின் பாதுகாப்பில் உள்ள பொலிஸாரை விடுதலை செய்யும் விடயமாக— முயற்சி மேற்கொண்டுள்ளோம் என்றும்—

ஜனாதிபதியின் செயலாளர் உறுதி கூறினார்.

ஆனால் இங்கு வந்த பின்னர் அப்படி ஒரு ஏற்பாடும் நடக்கவில்லை என்று அறிந்தேன் — இவ்வாறு அவர் சொன்னார். (அ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:—

**15 வயதுப் பிரிவு**

★ சென். பற்றிக்ஸ் எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி — சென். பற்றிக்ஸ் மைதானம்

★ யாழ் இந்து எதிர் ஸ்கந்த வரோதயா — யாழ். இந்து மைதானம்.

**17 வயதுப் பிரிவு**

★ ஸ்கந்தவரோதயா எதிர் யாழ் இந்து — ஸ்கந்தவரோதயா மைதானம்.

★ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சென். பற்றிக்ஸ் — யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்.

★ கொக்குவில் இந்து எதிர் கனகரத்தினம் ம. ம. வி — கொக்குவில் இந்து மைதானம்.

17 வயதுப் பிரிவு ஆட்டங்கள் காலை 8.30 மணிக்கும் 15 வயதுப் பிரிவு ஆட்டங்கள் காலை 9 மணிக்கும் ஆரம்பமாகும். (உ-20)

o o o

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கிரிக்கெட், வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சங்கானை பாரதி மைதானத்தில் நடைபெறும்.

வலைப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து 'ஏ'' அணி மோதும்.

மென்பந்து கிரிக்கெட் ஆட்டத்தில், புளுபேட்ஸ் ''ஏ'' அணியை எதிர்த்து மாளிகாவத்தை ''ஏ'' அணி மோதும். (உ-20)

o o o

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தி வரும் கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:—

★ 3.30 மணி:- அச்சுவேலி வி. க. எதிர் சென். அன்ரனிஸ் ''பி''

★ 4 45 மணி:- கே. கே. எஸ். ''ஏ'' எதிர் அரியாலை ஐ. வி. க. ''ஏ'' (உ 17)

o o o

வைக்கிங்ஸ் விளையாட்டு கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டு வரும் விலகல் முறை உதைபந்தாட்ட போட்டித் தொடரில் இன்று மாலை அரியாலை சனசமூக விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவிருக்கும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:—

★ 3.30 மணி:- சென். நீக்கிலஸ் வி. க. எதிர் பாடுமீன் வி. க. ''பி''

★ 4.45 மணி:- பாடுமீன் வி. க. ''ஏ'' எதிர் அரியாலை ஐ வி. க. (உ-17)

o o o

யாழ். மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கம் கோண்டாவில் குமரன் மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று மாலை நடைபெறும். பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு: —

★ 3.30 மணி;- நாவாந்துறை சென். மேரிஸ் ''ஏ'' எதிர் ஊரெழு றோயல் ''ஏ''

★ 4.30 மணி:- மயிலங்காடு ஞானகலா ''ஏ'' எதிர் திருமலை நட்சத்திரங்கள்

o o o

'உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். பல்கலைக் கழகம் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடைபெறவிருக்கின்றன.

பெண்கள் பிரிவில் மூன்றாம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் இன்று காலை 8.15 மணிக்கு நடைபெறும். இந்த ஆட்டத்தில் பமிலியன்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதும்.

மாலை 3.30 மணிக்கு நடைபெறும் பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் பல்கலைக் கழக அணியை எதிர்த்து யுத்காமல் அணி மோதும்.

மாலை 4 30 மணிக்கு ஆண்கள் பிரிவு இறுதியாட்டம் நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணிமோதும்.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு ஆலோசனைச் சபையின் தலைவர் டாக்டர் கே. சிவபாலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி ஏ. சிவபாலன் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களை வழங்குவார்.

''உதயன்'' நிறுவன கணக்காளர் திரு. ஜி. [illegible] சிறப்பு விருந்தினராகப் பங்குபற்றுவார்,

## கவலை தெரிவிப்பு

லண்டன், ஜூன் 19

தமிழ்நாட்டில் அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர் மீது மாநில அரசு புதிதாகக் கட்டுப்பாடுகள் விதித்துள்ளமை குறித்து லண்டனில் உள்ள பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸில் கவலை தெரிவித்துள்ளது.

### உடுகம்பொல...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தார் என்பதும் —

அதைத் தொடர்ந்து திரு உடுகம்பொல தலைமறைவாக இருந்து கொண்டு பிரேமதாச அரசுக்கு சவாலாக அறிக்கைகளை வெளியிட்டு வந்தார் என்பதும் தெரிந்தவையே.

இதேவேளை, சட்டத்தரணி விஜேதாச லியனாராச்சி கொலை தொடர்பாக திரு: உடுகம்பொல பொலீஸாரினால் நீண்டகாலமாக தேடப்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

### விடுதலைக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தோம். அவரை விடுதலை செய்ய அரசு எவ்வித நடவடிக்கையையும் முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

இதனால் விரக்தியடைந்த நான் எனது சகோதரனைப் பார்க்க கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனிடம் எனது சகோதரனை விடுதலை செய்யுமாறு கேட்க உத்தேசித்துள்ளேன்— என்றார்.

''தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்கள் ஒன்றாகக் கூடி இங்கு வந்துள்ளதுபோல இந்த விடயம் தொடர்பாக தென்னிலங்கையில் அரசுக்கு எதிராகப் போராட்டம் ஏதாவது நடத்த திட்டமிட்டுள்ளீர்களா?'' எனக் கேட்டபோது—

''அவ்வாறு நடத்த முடியாது. வறுமை நிலையில் உள்ள நாம் போராட்டம் நடத்தினால் எம்மை அடித்துக் கலைத்து விடுவார்கள்''— என்று தேரர் பதிலளித்தார்.

''சிங்கள இளைஞர்கள் இங்கு தடுத்துவைக்கப்பட்டதற்காக குரல் கொடுக்கும் நீங்கள், சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்கள் விடுதலை பற்றி குரல் எழுப்புவீர்களா? என்று கேட்டதற்கு—

''அவர்களை விடுதலை செய்யுமாறும் நாம் கேட்போம். ஆனால் எம்மினத்தை சேர்ந்தவர்களையே விடுதலை செய்ய முயற்சிக்காத அரசு, எப்படி தமிழ் இளைஞர்களை விடுதலை செய்ய முயற்சிக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?'' — எனத் திருப்பி வினாவினார். (அ-எ)

## ஒத்திவைப்பு

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி உயர் வணிகத் தகுதித்தேர்வு 3 ஆம் வருடத்துக்கான இறுதிப் பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் 21 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த மேற்படி பரீட்சை திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படமாட்டாது என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

உயர் கணக்கியல் தகுதித் தேர்வுப் பரீட்சை குறிப்பிட்ட திகதியில் ஆரம்பமாகும் என்று யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (ஓ-3)

## இசைவிழா

யாழ். திருமறைக் கலாமன்றம் எடுக்கும் இசைவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 5.30 மணிக்கு பிரதான வீதி மன்ற அரங்கில் ஆரம்பமாகும். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் உபஅதிபர் திரு. பொன். தெய்வேந்திரம் தலைமை வகிப்பார்.

பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மாவின் இசைச் சொற்பொழிவும், திருமதி நந்தினி விஜயரட்ணத்தின் வீணை இசையும், திரு. எஸ். குமாரசாமி, திரு. பொன். சுந்தரலிங்கம் ஆகியோரின் இசைக்கச்சேரிகளும் இன்றைய நிகழ்ச்சிகளில் இடம்பெறும்.

### கொழும்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''தமிழர் தலைவர்களுடன் நடத்திய பேச்சுகளில் யாழ்ப்பாணத்து மக்கள் கடவுச்சீட்டு போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள வவுனியா நகரை ஓர் அரச மையமாக அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற விஷயத்தில் கருத்துடன்பாடு காணப்பட்டுள்ளது.

''வவுனியாவில் இருந்து மக்கள் வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ள வசதியாக பன்னாட்டுத் தொலைபேசித் தொடர்புகள் ஏற்படுத்தப் படும்.

''விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தும் சாத்தியக் கூறுகளை இலங்கை அரசு எப்போதும் மறுத்தது இல்லை.

''நான் பாரீஸில் தங்கியிருக்கும்போது, விடுதலைப் புலிகளின் ஐரோப்பியப் பிரதிநிதியைக் கட்டாயமாகச் சந்திக்கப்போவது இல்லை''— இவ்வாறு பிரதமர் தெரிவித்தார். (ஓ-எ)

### குமணவில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்தன்ளன.

தனியார் வர்த்தகர் ஒருவருக்கு சைக்கிள் உதிரிப்பாகங்களும் 'குமண' கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

863 மெற்றிக் தொன் அரிசி, 104 மெற்றிக் தொன் மைசூர் பருப்பு, 409 மெற்றிக் தொன் சீனி, 50 மெற்றிக் தொன் தேயிலை, 20 மெற்றிக்தொன் சவர்க்காரம் என்பன யாழ். செயலகத்துக்கென எடுத்து வரப்பட்டுள்ளன.

இதற்கிடையில்—

'குமண' கப்பலில் தபால் பொதிகள் எதுவும் எடுத்து வரப்படவில்லை.

மேற்படி கப்பலில் 300 தபால் பொதிகள் எடுத்து வரப்பட இருப்பதாக முன்னர் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்த போதும் அவை எடுத்து வரப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது (ஓ-5-15-17)

### வடக்கு-கிழக்கு மாகாண...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

12. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப் படுத்தல்:
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு/திருமதி செல்வி:...... ...................... ..........................
என்பவரை எனக்குத் தெரியும் என்றும் அவர்/அவள்......................... திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

உறுதிப்படுத்துபவரின் பெயர்:
கையொப்பம்:
பதவி:
பதவி முத்திரை இடுக:

(இச் சான்றிதழ் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதிவான்/சத்திய ஆணையாளர் / வழக்கறிஞர்/தரைப்படை அல்லது விமானப்படையில் கட்டளை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது வருடத்திற்கு 37, 200/- ரூபாவுக்கு மேற்பட்ட இரட்டிய வேதனமாகப் பெறும் நிரந்தர பதவி வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர், ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்).

பரீட்சைக் கட்டணம் ரூபா 100/- செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை இங்கே ஒட்டவும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# மன்னார் பண்டிவிரிச்சான் தேவாலயம்மீது'குண்டுவீச்சு

## பங்குத் தந்தை காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 19 மன்னார் மாவட்டம் பெரிய பண்டிவிரிச்சானில் நேற்று முன்தினம் மாலை 4-30 மணியளவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில், அங்குள்ள தேவாலயம் ஒன்று சேதமடைந்தது. தேவாலய பங்குத் தந்தை வண. பிதா. பெனடிக்ற் இச் சம்பவத்தில் காயமடைந்தார்.

தேவாலயத்தின் மீது நான்கு குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

பெரிய பண்டிவிரிச்சான் காட்டுப் பகுதியிலும் — மரப்புக்கடந்தானிலும் மற்றும் சில இடங்களிலும் நேற்று முன்தினம் பகல் வேளை பரவலாக விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதேவேளை—

ஆயுதப் படையினர் நேற்று அதிகாலை மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர் என இலங்கை வானொலி செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையே மேற்கொள்ளப்படுகிறது என்றும்—

நானாட்டானுக்கும் சிலாவத்துறைக்கும் இடையில் உள்ள விடுதலைப் புலிகள் முகாம்களை அழிப்பதே இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-5)

---

யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## பழைய மாணவர் சங்க தினமும் வருடாந்தப் பொதுக் கூட்டமும்

6-6 93 உதயன் பத்திரிகை அறிவித்தலின் படி 20-6 93 ஞாயிறு குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் கல்லூரியில் நடைபெறவுள்ளன. பழைய மாணவர்கள் தவறாது சமுகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

த. முத்துக்குமாரசுவாமி — தலைவர்
பொ. விக்னேஸ்வரலிங்கம் — செயலாளர்

(26162)

---

## மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

அச்செழு

சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம்

சமூக வளர்ச்சி நிதிக்காக நாளை (20-06-93) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2-30 மணியளவில் நீர்வேலி சவாரி மைதானத்தில் A. B. C. என்ற மூன்று பிரிவுகளாக மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெறவுள்ளது.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

(6271)

---

பொலிகண்டி கந்தவனக்கடவை

அருள்மிகு கந்தசுவாமி கோவில் மகோற்சவ கால

## தெய்வீகச் சொற்பொழிவு

இன்று 19 06 93 சனிக்கிழமை மகோற்சவம் தொடக்கம் 15 தினங்களும் இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை நடைபெறும்.

விடயம்: **"கந்தபுராணம்"**

நிகழ்த்துபவர்: ஈழநல்லூர்
'கலைமாமணி'' ''வில்லிசை கலாபூபதி''
''சித்தாந்த வித்தகர்''
சாம்பசிவ சோமாஸ்கந்த சர்மா அவர்கள்

அனைவரும் வருக திருவருள் பெறுக

(26157) — ஆலய தர்மகர்த்தா

---

உரும்பராய் ஒடையம்பதி
கற்பக விநாயகர் ஆலயம்

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 1993

முக்கிய நிகழ்ச்சிகள்:

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | — | 19 - 06 - 93 இன்று நண்பகல் 12 மணி |
| மஞ்சத் திருவிழா | — | 28 - 06 - 93 இரவு 8 மணி |
| சப்பரத் திருவிழா | — | 01 - 07 - 93 இரவு 8 மணி |
| தேர்த் திருவிழா | — | 02 - 07 - 93 மு. ப. 10 மணி |
| தீர்த்தத் திருவிழா | — | 03 - 07 - 93 மு. ப. 10 மணி |
| பூங்காவனத் திருவிழா | — | 04 - 07 - 93 பி. ப. 5-30 மணி |
| வைரவர் பொங்கல் | — | 06 - 07 - 93 பி. ப. 4 மணி |

தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா நடைபெறும். விசேட நாட்கள் தவிர மற்றைய நாட்களில் தினமும்

| | |
|---|---|
| மு. ப. அபிஷேகம் | 9-30 மணி |
| ஸ்தம்ப பூசை | 11-00 மணி |
| வசந்தமண்டபப் பூசை | 12-00 மணி |
| பி. ப. விசேட பூசை | 5-00 மணி |
| ஸ்தம்ப பூசை | 5-30 மணி |
| பஜனை | 6-00 மணி |
| நாதஸ்வரக் கச்சேரி இரவு | 6-15 — 6-45 மணி |
| சைவப் பெரியார்களின்- உபந்நியாசம் இரவு | 6-45 — 7-55 மணி |
| வசந்தமண்டபப் பூசை இரவு | 8-00 மணி |

• ஆலய பரிபாலன சபையினர்.

(26153)

---

### யுத்தக் கைதிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னர். உறவினர்கள் கரையில் இறங்கியதும் துறைமுகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்ட விசேட இருப்பிடத்துக்கு அவர்களை விடுதலைப் புலிகள் பிரமுகர்களும், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் அழைத்துச்சென்று களைப்பாறச் செய்தனர். அவர்களுக்கு குளிர்பானம் வழங்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி யுத்தக் கைதிகளின் உறவினர்களை வரவேற்று உரையாற்றினார்.

உறவினர்களின் சார்பில் வேகாலையைச் சேர்ந்த பி.டி. அல்பிரட் பெர்னாண்டோ உரையாற்றினார்.

அதைத் தொடர்ந்து விடுதலைப் புலி வீரர்களின் இரு வாகனங்கள் முன்னே செல்ல, அடுத்து செஞ்சிலுவை சர்வதேசக் குழு அதிகாரிகளின் வாகனம் செல்ல, நடுவே மூன்று வாகனங்களில் யுத்தக் கைதிகளின் உறவினர்கள் 78 பேரும் யாழ் நகருக்கு அழைத்து வரப்பட்டனர்.

பருத்தித்துறையில் ஏராளமான மக்கள் யுத்தக் கைதிகளின் உறவினர்களைப் பார்த்தனர்.

பருத்தித்துறையில் தங்கியிருந்த உறவினர்கள் பலரும்—

''எப்போது எமது பிள்ளைகளைப் பார்க்கப் போகிறோமோ'' என்று உரத்த குரலில் தேம்பித் தேம்பிக் கண்ணீர் சிந்தியதைக் காணக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த உறவினர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். 65க்கும் 70 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களும் வந்துள்ளனர். பல முதியவர்களும் வந்துள்ளனர். ஐந்து யுத்தக்கைதிகளின் மனைவிமாரும் வந்துள்ளனர். உறவினர்களில் பத்துக்கு மேற்பட்டவர்கள் இளம் வயது ஆண்கள் ஆவர்.

ஒரு பொலீஸாரின் மூத்த சகோதரரான புத்த பிக்கு ஒருவரும் வந்துள்ளார். இவர்களில் அநேகர் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள்.

யாழ். நகருக்கு அழைத்து வரப்பட்ட உறவினர்கள், யுத்தக் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கும் இடத்துக்குச் சுமார் 10.30 மணியளவில் கூட்டிச் செல்லப்பட்டனர்.

அவர்களில் பலரும் மண்டபத்திற்குள் நுழையும் போதே அழுது புலம்பி பலத்த சத்தத்துடன் கூக்குரலிட்டவாறு வாஞ்சையோடு தமது பிள்ளைகளை, சகோதரர்களை, கணவன்மாரை நாடி ஓடினர்.

அவர்கள் தத்தமது உறவு முறையான யுத்தக் கைதிகளை கட்டிப்பிடித்துக் கதறி அழுத காட்சி நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

தேம்பித் தேம்பி அழுதவாறும், சுகம் விசாரித்தும், குடும்ப நன்மைகள் தீமைகளைக் கூறியும் அவர்கள் சோகமே வடிவமாக நின்றனர். அவர்களில் நான்கு பெண்கள் மூர்ச்சித்து விழுந்தனர். (அ-3-5)

---



யுத்தக் கைதிகளின் உறவினர்கள் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தில் வந்திறங்கிய போது அவர்களைப் பார்க்க பருத்தித்துறை துறைமுகக் கரையோரத்தில் ஆவலுடன் கூடிய பொதுமக்கள் கூட்டம்.

## ரணிலின் இந்திய விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாம்

புதுடில்லி, ஜூன் 19 இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுவதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இதேவேளை —

பாரிஸில் இருந்து கொழும்பு திரும்பும் வழியில் இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க—

எதிர்வரும் திங்கட்கிழமை இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மாவையும் அடுத்த நாள் பிரதமர் நரசிம்மராவையும் சந்தித்துப் பேசுவார். அவருக்கு திரு. ராவ் மதிய போசன விருந்துபசாரம் அளித்துக் கௌரவிப்பார்.

திரு. விக்கிரமசிங்க, இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங், நிதி அமைச்சர் மன்மோகன்சிங் ஆகியோரையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

---

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் இராசையா

(தியாகி லெப். கேணல் திலீபனின் தந்தை)

ஊரெழு மேற்கு, ஊரெழுவைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் நா. இராசையா அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலம்சென்ற பருவதவர்த்தனியின் அன்புக் கணவரும், இளங்கோ (கனடா), நம்பி, அசோகன் (கனடா), பார்த்திபன் (தியாகி லெப். கேணல் திலீபன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மகேஸ்வரி, நளாயினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வேன், தமிழினி, வர்ணன், நிலானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19-06-93) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஊரெழு பொக்கனை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
இ. நம்பி (மகன்)

தியாகி திலீபன் வீதி,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(சி/5283)

## கந்தையா டானியேல் சிவரத்தினம்

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரி கண்டி வீதி, 'லட்டிமர் லொட்ஜ்' ஐ வசிப்பிடமாகக் கொண்டவருமான, இளைப்பாறிய விகிதர் கந்தையா டானியேல் சிவரத்தினம் மறுமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னார் அன்னா றோசபெல்லாவின் அன்புக் கணவரும், எட்வேட் விசயசிங்கராசா, நேசையா துரைரத்தினம், சொலமன் நவரத்தினம், சாமுவேல் யோகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நிக்கலஸ் அருமைநாயகம், காலஞ்சென்ற டெயிசி மகேந்திரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

நல்லடக்க ஆராதனை இன்று (19-06-1993) சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். பின் அவரது பூதவுடல் சாவகச்சேரி கிறிஸ்தவ சேமக்காலைக்கு கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சொ. நவரத்தினம்

''லட்டிமர் லொட்ஜ்''
கண்டி வீதி,
சாவகச்சேரி.

[26152]

## க. கயிலைநாதன்

தெல்லிப்பழை கிழக்கு. சைவப்பிரகாச வித்தியாசாலையடியைச் சேர்ந்த க. கயிலைநாதன் (National Textiles Corporation, Veyangoda) நேற்று (18.6.93) காலமானார். அன்னார் விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும், சுபாங்கி (கொழும்பு), அனுசியா (Shabra Unico Finance, Colombo), சதுர்முகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கந்தையா - நாகமுத்து ஆகியோரின் மகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடையில் உள்ள Dr. நடராஜாவின் இல்லத்தில் இன்று (19-6-93) பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. விக்கினேஸ்வரி [மனைவி]

சுன்னாகம்
(26163)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் ... னம் நாவலர் வீதி, 192/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org